**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**

**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>MCOP .No. 21/2024</u>**

**<u>நாள் : 03.06.2025</u>**

**எ.ம.சா.** 3 (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பாலாஜி | மாவட்டம் | : | |
| தந்தை பெயர் | : | திரு. வெங்கடேசன் | வயது | : | |
| ஊர் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | தேசியம் | : | |

**சாட்சி அழைப்பாணையின் பேரில் ஆஜர். சத்திய சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை.**

1. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை கிடைக்கப்பெற்றேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசம் சரிதான். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட நபர் நான் தான். நான் ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். 18.08.2023 அன்று பிற்பகல் 3 மணி அளவில் TN 83 MA 5166 என்ற பதிவு எண் கொண்ட லாரியை வாணியம்பாடியில் இருந்து திருப்பத்தூர் நோக்கி நான் ஓட்டி வந்தேன்.

2. நான் திருப்பத்தூர் பேருந்து நிலையம் அருகில் வந்த உடன் போக்குவரத்தை சரி செய்யும் காவலர் திருப்பத்தூர் நோக்கி வந்த வாகனங்களை நிறுத்தினார். அவர் அனுமதித்த பின்னர் தான் நாங்கள் செல்ல தொடங்கினோம். அப்போது கிழக்கில் இருந்து மேற்காக ஒரு பெண் குறுக்கே ஓடி வந்துவிட்டார். சாலையில் குறுக்கே வந்துவிட்டார்.

3. இடதுபுற சாலையில் நின்று கொண்டிருந்தவர் மீது நான் தான் மோதி விபத்தை ஏற்படுத்தியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு. நான் வேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதாக சொல்வது தவறு. நான் வந்து கொண்டிருந்த ரோட்டின் குறுக்கே அவர்கள் வரவில்லை என்றால்

விபத்து நடந்திருக்காது. இந்த விபத்திற்கு யார் காரணம் என்றால் அந்த பெண். இடதுபுறம் நின்றிருந்தவர் மீது நான் வேகமாக மோதியதாக சொல்வது தவறு.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் தான் பாலாஜி என்பதை காண்பிப்பதற்கு ஆதார் அட்டை போன்ற அடையாள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. என்ன வேலை செய்கிறேன் என்றால் உதய் இண்டேன் கேஸ் நிறுவனத்தில் ஓட்டுநராக பணி புரிந்து வருகிறேன். ஓட்டுநர் உரிமம் நகல் ஏதும் கொண்டு வந்துள்ளேனா என்றால் அசல் ஓட்டுநர் உரிமம் ஆதார் அட்டை ஆகியவற்றை நிறுவனத்தில் வாங்கி வைத்துள்ளார்கள். 18.08.2023 அன்று எந்த வாகனத்தை ஓட்டி சென்றேன் என்றால் போலிரோ மேக்ஸி டிரக் வாகனத்தை ஓட்டிச் சென்றேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.21 ஓட்டுநர் உரிமம் என்னுடையது தான்.

2. விபத்து சம்பந்தமாக திருப்பத்தூர் நகர காவல்துறையினர் எனக்கு எதிராக வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றால் சரிதான். சாலையின் இடது புறமாக நின்று கொண்டிருந்து தன் மீது நான் தான் வாகனத்தை ஓட்டிவந்து மோதிவிட்டதாக நாகம்மாள் என்பவர் கொடுத்த தகவலின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு எதிராக தான் இறுதி அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருப்பத்தூர் நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டு 06.03.2024 அன்று அபராதம் செலுத்தி உள்ளேன் என்றால் சரிதான்.

3. அதனால் இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்திவிட்டு தற்போது மனுதாரருக்கு எதிராக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்/. V.L. சந்தோஷ்,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.